7. தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு —ஆளுநர் ஒப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை நாம் நிறைவேற்றி அனுப்பிய அரசினர் தனித் தீர்மானத்தில், ஆன்லைன் ரம்மி விளையாட்டு தடைச் சட்டம் குறித்த மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்கள் மாண்புமிகு ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டு, நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி, இதனால் தமிழ்நாட்டின் நிருவாக நலனும், இளைஞர்களின் எதிர்காலமும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தோம்.*

மேலும், பொது வெளியில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்துவரும் சர்ச்சைக்குரிய கருத்துகள் குறித்தும் நாம் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

இந்தச் சூழ்நிலையில், இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் ஒரு நல்விளைவாக, (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மாலை மாண்புமிகு ஆளுநர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மாலை மாண்புமிகு ஆளுநர் அவர்கள், ஆன்லைன் ரம்மி விளையாட்டு தொடர்பான மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்தச் சட்டமானது இன்றே தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்து, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 8–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் மாண்பை நிலைநாட்டித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அனைவரின் சார்பாக நானும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11–4–2023), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*****

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 20–10–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 115–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

81. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 9–11–2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 124–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

82. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 29–1–2022 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 13–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

83. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்கள் செய்தது குறித்து மனிதவள மேலாண்மை (எம்) துறையின் 26–4–2022 ஆம் நாளிட்ட